ருஹுண பல்கலைக்கழ - 2020

---

## 1.1 நிதிக்கூற்றுக்கள்

ருஹுண பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ருஹுண பல்கலைகழகத்தின் நிதிக்கூற்றுக்களினுள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ருஹுண பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

-----------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

**நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு**

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு

போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “சிறப்பாகக் திட்டமிட்டு பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

## 1.6 பெற வெண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**முற்பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 26 விரிவுரையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 3,149,340 ஆன ஆராச்சி முற்பணம் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படாத முற்பணம் விரைவாக தீர்க்கப்படுவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு தாமதமாகல் தொடர்பாக விசாரிக்கப்பட்டு கடிதம் முன்வைக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் முற்பணம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 45(2) இன் (xv) ஆம் உப உறுப்புரை | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது முதுகலை பட்ட பீடத்தின் ரூபா 79,755,690 ஆன மிகை பணம் 03 நிலையான வைப்புக்களில் முதலிடப்பட்டிருந்தது. | எல்லா முதலீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பது கட்டுப்பாட்டு சபை அங்கீகாரத்தின் கீழ் கணக்கு பேணிச் செல்லப்படுகின்ற மக்கள் வங்கியினாலாகும். | தொடர்புடைய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு பணம் முதலிடல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 1994 ஏப்ரல் 20 திகதிய 94/30 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | வெளிநாட்டு அளிப்புக்கள் மற்றும் தொழிநுட்ப உதவிகள் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஆழ் அறிவு மற்றும் இணக்கம் பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பினும் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படாது 05 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | இது தொடர்பாக செயற்படுகின்ற சர்வதேச அலகினால் தொடர்புடைய அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வெளிநாட்டு செயற்திட்ட அளிப்புக்கள் வெளிநாட்டு வளங்கல் திணைக்களத்தின் ஊடாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2014 பெப்ரவரி 11 திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | | | |
| (I) | 4(I) ஆம் பந்தி | 2014 ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் ஆய்வு முன்மொழிவு அங்கீகரிக்கப்படாது பல்கலைக்கழக பதவியணியினருக்காக கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | உயர் கல்வி சுற்றறிக்கை இல 1/2011 மற்றும் 1/2011(1) பயன்படுத்தப்பட வேண்டியிருக்க வேண்டுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல 5/2014 (1) ஊடாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமையினால் அதன் பிரகாரம் ஆய்வு கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளது | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஊடாக 2011 வரவு செலவு கூற்றறிக்கை இரத்து செய்யப்பட்டுள்ளமையினால் இந்த முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையை அடிப்படையாக கொண்டு ஆய்வுகளுக்கான கொடுப்பனவு செலுத்தப்படல் வேண்டும். |
| (II) | 4(II) ஆம் பந்தியின் பிரகாரம் | ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டு 6 மாதங்களுக்குள் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முன்வைக்கப்படுகின்ற ஆய்வு அறிக்கைகளுக்காக குழு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கு ஆய்வு கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உயர்கல்வி சுற்றறிக்கை 1/2011 மற்றும் 1/2011(1) பயன்படுத்தப்பட வேண்டுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 5/2014(1) ஊடாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமையினால் அதன் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது . | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஊடாக 2011 வரவு செலவு கூற்றறிக்கை இரத்து செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே 2/2014 உம் முகாமைத்துவ சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகளுக்கான கொடுப்பனவு செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (III) | 4(III) ஆம் பந்தி | விரிவுரையாளர்களின் ஆய்வு பத்திரிகை, வெளியீட்டொன்றில் வெளியிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும், சுற்றறிக்கையின் 5 (ii) | உயர்கல்வி சுற்றறிக்கை 1/2011 மற்றும் 1/2011(1) பயன்படுத்தப்பட வேண்டுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 2011 வரவு செலவு சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள 1/2011 சுற்றறிக்கை இரத்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வு மேற்பார்வை குழுவிற்கு இறுதி ஆய்வு அறிக்கை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை இல 5/2014(1) ஊடாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தொடர்புடைய ஆய்வு கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளது. | செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2/2014 சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு கொடுப்பனவு செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2016 திசெம்பர் 30 திகதிய 2016/3 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப கல்விபிரிவின் (ICT) கல்விபிரிவு பிரதானி தவிர அனைத்து விரிவுரையாளர்களும் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் வாரத்தினுள் நிறைவேற்றப்பட வேண்டிய குறைந்தப்பட்ச விரிவுரை மணித்தியாலத்தினை விட 70 சதவீதம் உம் 50 சதவீதம் உம் இடையேயான அளவு குறைவாக விரிவுரை நடத்தப்பட்டிருந்தது. | விரிவுரை பதவியில் தகுதிக்காண் காலத்தினுள் கடமையாற்றுகின்ற இரு விரிவரையாளர்களின் சேவை நிரந்தரமாக்கல் நிபந்தனையில் உள்ள முதுகலை பட்ட கற்கைநெறி நடவடிக்கைகளுக்கு சலுகையாக குறைந்த கற்பித்தல் காலமொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் விரிவிரையாளர்களில் 83 சதவீதத்திற்காக ஒரே தடவையில் கல்விசார் விடுமுறை பெற்றுக் கொடுக்கப்பட முடியாது. |

## 2. நிதி மீளாய்வு

-------------------

### 2.1 நிதி விளைவு

-------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 294 மில்லியன் மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 834 மில்லியனாக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,128 மில்லியன் முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இவ் அதிகரிப்பிற்கு மீண்டெழும் அளிப்பு ரூபா 272 மில்லியன் அதிகமாக பெறல் மற்றும் செயற்பாட்டு செலவினம் ரூபா 285 மில்லியனினால் குறைதல் பிரதான காரணங்களாகக் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

-------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆசிய பசுபிக் நெட்வர்க் (APN) செயற்திட்டத்தின் கள உதவியாளர் மற்றும் ஆய்வுகூட உதவியாளர் பதவி, 02 பதவிகள் என | தொடர்புடைய உத்தியோகத்தர் ஆய்வுக்கூட நடவடிக்கைகளுக்காக நன்கு பயிற்சிக்கப்பட்டிருந்தமையினால் களத்தின் மாதிரி | இந்த உத்தியோகத்தர் களத்தில் சேவையாற்றாத நாட்களில் ஆய்வுக்கூடத்தில் சேவையாற்றியுள்ளார். அதனால் இரு பதவிகளாக |

| | | |
|---|---|---|
| கருதப்பட்டு உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 389,349 அதிகமாக சம்பளம் மற்றும் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | சேர்க்கப்படாத நாட்களில் அவரின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அளவு விஞ்சாத விதத்தில் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளதென தெரிவிக்கின்றேன். | கருத்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட முடியாது. |

## 3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியருக்காக வருடாந்த ஆய்வு கொடுப்பனவாக ரூபா 236 மில்லியன் செலுத்தப்பட்டிருப்பினும் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வு மற்றும் அவற்றின் பெறுபேறுகள் மக்களுக்கு தொடர்பாடல் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆய்வு பெறுபேறு பத்திரிகை வெளியிடல் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. அவ் ஆய்வு பெறுபேறு அடிப்படையில் தொடர்புடைய மாணணவர்கள் அல்லது விரிவுரையாளர்கள் இன்னுமாக அந் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு செல்கின்றனர். | ஆய்வின் பெறபேறுகள் வெளியீட்டொன்றில் வெளியிடல் மட்டும் போதுமானதாக காணப்படாததுடன் அவற்றின் பெறுபேறுகள் மக்களுக்கு தொடர்பாடல் மெற்கொள்வதற்கு வேலைத்திட்டமொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தொழிநுட்ப பீடத்தினால் நடத்தப்பட்ட தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு தொடர்புடைய 1 மற்றும் 2 ஆம் கட்டங்களின் இரு செமஸ்டர்களில் நடத்தப்பட்ட பரீட்சைகளில் தோல்வியடைந்த சதவீதம் 30 தொடக்கம் 98 சதவீதம் வரை கொண்டிருந்தது. | இதற்கு தொடர்புடைய பிரச்சனைகள் தற்போது அடையாளப்படுத்தப்பட்டுள் ளதுடன் இந் நிலைமை நிர்வகிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | மாணவர்கள் பரீட்சைகள் தோல்வியடைவதற்கு தாக்கமளிக்கின்ற காரணம் தேடப்பட்டு பிரச்சனை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | தொழிநட்ப பீடத்தில் 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 1 ஆம் கட்டத்தின் இரண்டாம் செமஸ்டருக்கு முகங்கொடுக்கின்ற மாணவர்களில் 72 சதவீதம் தோல்வியடைந்திருந்ததுடன் தேர்ச்சியடைந்த மாணவர்களில் 63 சதவீதமானோர் மிகக் குறைந்த சித்தியான சீ மதிப்பெண்ணை பெற்றிருந்தனர். | தொழிநுட்ப பீடத்தின் மாணவர்களின் பாட விடயம் தொடர்பாக அறிவு மற்றும் புரிதல் திறன் பலவீனமடைதல் மற்றும் சில விரிவரையாளர்களும் மாணவர்களின் அறிவு தொடர்பான புரிந்துணர்வுடன் கற்கைநெறி வழிநடத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் ஏதேனும் குறைப்பாடு ஏற்பட்டுள்ளது. | இவ்வாறு பாரியதாக மாணவர்கள் பரீட்சை தோல்வியடைவதற்கு காரணங்கள் தேடப்பட்டு அப் பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பொறியியலாளர் பீடத்தின் E 2018 Batch (C - 18 ) குழுவின் 2019 ஆம் ஆண்டின் முதல் செமஸ்டரில் ME 1201 பாடத்திற்காக பரீட்சைக்கு தோற்றிய 250 மாணவர்களில் 153, அதாவது 61 சதவீதமானோர் பரீட்சை தோல்வியடைந்திருந்தனர். அவ் பாடத்திங்காக எந்தவொரு A சித்தியும் பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன், C மற்றும் C+ சித்தி பெற்றிருந்த மாணவர் எண்ணிக்கை 65 ஆகக் காணப்பட்டது. | கலை இயந்திர வரைப்பட விரிவுரைகளுக்காக ஆலோசகர்கள் ஆட்சேர்ப்பு செய்தல், மாணவர்களின் இயந்திர வரைபினை பரீட்சித்து அவைகளின் குறைப்பாடுகளை கலந்துரையாடல் மற்றும் பயிற்சிக்கான சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட்டு இயந்திர வரைபு என்ற வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | இவ்வாறாக பரீட்சை தோல்வியடைவதற்கு காரணங்கள் தேடப்பட்டு மாணவர்களுக்கு நேர்மையற்றதல்லாத வேலைத்திட்டமொன்று தயாரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | சமாதானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான முதுகலை பட்ட கற்கைநெறியின் முதல் மாணவர் குழுவிற்காக பதிவுசெய்யப்பட்ட 26 மாணவர்களுக்காக 5 ஆண்டுகள் நிறைவடைந்திருப்பினும் 14 மாணவர்கள், அதாவது 54 சதவீதமானோர் கற்கைநெறியினை நிறைவு செய்திருக்கவில்லை. | அம் மாணவர்களுக்காக அவ்வப்போது கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல் ஊடாக தெரிவிக்கப்பட்டிருப்பினும் சில மாணவர்கள் மட்டும் அம் மட்டத்தினை நிறைவு செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளனர். | புலமைபரிசில் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்ற கற்கைநெறிகளான படியினால் அவ் புலமைபரிசினால் அதிகபட்ச பலனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | ஏதேனும் பட்ட கற்கைநெறியொன்று புலமைபரிசில் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் செயற்படுத்தும் முதன்மை நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பினும் சமதானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான முதுகலை பட்ட கற்கைநெறியின் விண்ணதாரிகளுடன் அதற்காக உடன்படிக்கை ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் காண்பிக்கப்பட்ட பின்னர் தற்போது கல்வி நடவடிக்கைகளை பின்பற்றும் புலமைபரிசில் பெறுவோரை கொண்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | வெளிநாட்டு அளிப்பின் கீழ் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களின் ஊடாக பெறப்படுகின்ற புலமைபரிசில் அரசிற்கு பெறப்படுகின்ற அளிப்பாகியமையினால் அவை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு செயற்படுத்தப்படல் வேண்டும். |

### 3.4 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தற்போது பல்கலைக்கழகத்தினுள் சேவைப்புரியாத கல்விசாரா பதவியணியில் 04 உத்தியோத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 858,745 ஆன ஆய்வு கொடுப்பனவுகளுக்கு தொடர்புடைய ஆய்வு | இவ் உத்தியோகத்தர்கள் றுஹுன பல்கலைக்கழகத்தில் கடமையில் ஈடுபட்டிருக்கும் போது ஆய்வு முன்மொழிவு முன்வைக்கப்பட்டு ஆய்வு கொடுப்பனவு பெற்றுக் | ஆய்வு கொடுப்பனவு பெற்றுக் கொள்ளும் அனைத்து உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஆய்வு அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| அறிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்ளப்பட்டதுடன் அவர்கள் இடமாற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து கொடுப்பனவு நிறுத்தப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைப்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 பெப்ரவரி 23 ஆம் திகதி வரையில் முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தின் கட்டிட வளாகம் நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு மொத்த ஒப்பந்த பெறுதியில் 20 சதவீதமான ரூபா 45,423,367 ஆன முற்பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பினும் 02 ஆண்டுகளான ஒப்பந்த காலம் கடக்கும் வரையில் பெற்றுக் கொடுக்கப்பட்ட முற்பணத்திற்கு ஏற்ற வேலை பகுதியொன்று நிறைவேற்றப்படாமை ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைப்பாடாக காணப்பட்டது. | இந்த முற்பணம் செலுத்தப்படும் போது அதற்கு பாதுகாப்பு உத்தரவாதமொன்று பல்கலைக்கழகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதனால் முற்பணம் தொடர்புடைய எந்தவொரு வேலை பகுதியொன்றும் நிறைவேற்றப்படாதிருப்பினும் கூட அம் முற்பணம் அறவிடப்படும் திறன் பல்கலைக்கழத்திற்குரியதாகும். | ஒப்பந்த நிர்வாகம் முறையாக மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் நிறுவகத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 – 2018 காலப்பகுதிக்கு தொடர்புடைய கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2018 ஆண்டின் போது புதிய 22 தொலைதூர கற்கைநெயிகள் மற்றும் நிகழ்நிலை கற்கைநெறியொன்று ஆரம்பிப்பதற்கும் அனைத்து தொலைதூர மற்றும் தொடர்ச்சியான கல்வி பட்ட கற்கைநெறிகளில் 60 சதவீதம் வேலையை நோக்கமாகக் கொண்ட பாடத்திட்டத்தினை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருப்பினும் எந்தவொரு பணியும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டில் காலி மற்றும் ஹம்பந்தோட்டையில் பிரதேச மத்திய நிலைங்கள் 02 ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன் ஊடாக தொழில்சார்ந்த வெவ்வேறு கற்கைநெறிகள் ஆரம்பிப்பதற்காக விண்ணப்பப்படிவங்கள் கோரப்படினும் போதுமான விண்ணப்பப்படிவங்கள் பெறப்படாமை மற்றும் மென்பொருள் அமைப்பொன்று பெறப்படாமை காரணத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தர்க்க ரீதியான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் குறிக்கோள் ஸ்தாபிக்கப்பட்டு அவை அடையப்படுவதற்கு நிறுவகத்தின் வளங்கள் வழிநடத்தப்படுவதற்கு முாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |